செ.வெ.எண்: 08 நாள்:03.07.2019

**கரூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த பள்ளி கல்வி சார்பில் மாற்றுத்திறனாளி மாணவ மாணவர்களுக்கான விழிப்புணர்வு முகாம் மற்றும் மருத்துவ முகாம் 12.07.2019 முதல் 23.07.2019 வரை நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி சார்பில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு முகாம் மற்றும் மருத்துவ மதிப்பீட்டு முகாம் நடத்தப்படவுள்ளது தொடர்பான ஆலோசனை கூட்டம் இன்று 03.07.2019 மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்தில் வரும் 12ம்தேதிமுதல் 6 முதல் 18 வயதுடையமாற்றுத்திறன் மாணவ, மாணவியர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் மருத்துவ மதிப்பீட்டு முகாம் ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் மூலம் நடத்தப்படவுள்ளது. இந்த மருத்துவ முகாம் 12.07.2019 முதல் 23.07.2019 வரை கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் 12.07.2019 அன்று கரூர் ஒன்றியத்தில் சி.எஸ்.ஐ ஆண்கள் மேல் நிலைப் பள்ளியிலும், 15.07.2019 அன்று க.பரமத்தி ஒன்றியத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், 16.07.2019 அன்று கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் அரசு மேல் நிலைப்பள்ளியிலும், 17.07.2019 அன்று தோகைமலை ஒன்றியத்தில் அரசு மேல் நிலைப்பள்ளியிலும், 18.07.2019 அன்று தாந்தோணி ஒன்றியத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், 19.07.19 அன்று அரவக்குறிச்சி ஒன்றியத்தில் அரசு மேல் நிலைப் பள்ளியிலும், 22.07.2019 அன்று குளித்தலை ஒன்றியத்தில் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியிலும், 23.07.2019 கடவூர் ஒன்றியத்தில் அரசு மேல் நிலைப் பள்ளியிலும் என 8 இடங்களில் முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாம்களில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் தேசிய அடையாள அட்டை வழங்குதல், உதவி உபகரணங்கள் வழங்குதல், அறுவை சிகிச்சைகள் தேவைப்படும் குழந்தைகளுக்கு மேல் சிகிச்சைகளை வழங்குதல் உள்ளிட்ட உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகையான மாற்றுத்திறனாளி மாணவ-மாணவிகளும் இந்த சிறப்பு முகாமில் கலந்துகொள்ளும் வகையில் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முதன்மைக்கல்வி அலுவலர் திரு.ஊ.முத்துக்கிருஷ்ணன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல திருமதிபா.ஜான்சி மற்றும் சுதாதாரத்துறை அலவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**